**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 06–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் இல்லை . பிரதிவாதி ஆஜர். வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண். 1164/2023

பி.வா.சா.1 ஜீவப்பிரியா க/பெ. முருகேசன்

வாதி தரப்பு குறுக்குவிசாரணை :–

1. நான் தற்போது கணவன்,குழந்தைகளுடன் பவானியில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய கணவர் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். நான் M.A.B.E.D. படித்துள்ளேன். நான் அரசுபள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நானும் என் கணவருக்கும் அவசர தேவை ஏற்பட்டால் மூன்றாம் நபரிடம் கடன் வாங்கும் பழக்கம் உண்டு. நானும் என் கணவரும் மூன்றாம் நபரிடம் கடன் வாங்கும் போது காசோலை கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான்.

2. வாதி கிருஷ்ணதனராஜ்யை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் எனக்கு தெரியாது. வாதியை எனக்கு தெரியும் அவருடன் வரவு செலவு கணக்கு செய்து கொண்டுயிருந்தோம் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் வழக்கு காசோலை என்னுடையது அல்ல. மேலும் காசேலையில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல.

3. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர் வாதம் பற்றிய விவரம் தெரியும். நான் மேற்படி எதிர்வாதத்தில் காசோலை என்னுடையது அல்ல மற்றும் காசேலையில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி எதிர் வழக்குரையில் காசேலை என்னுடையது மற்றும் அந்த காசேலையில் உள்ள கையொப்பம் என்னுடையது என்று சொல்லியுள்ளேன் என்றால் தெரியாது.

4. வழக்கு காசோலை என்னுடையது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி வழக்கு காசேலையை தன்னுடைய வங்கியில்

வசூலுக்காக சமர்பித்து போதிய பணம் இல்லை என்று திருப்ப பட்டதால் வாதி தன்னுடைய வழக்கறிஞர் மூலம் எனக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். நான் அதை பெற்று கொண்டேன்.
5. மேற்படி சட்ட அறிவிப்பிக்கு நான் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை. வழக்கு காசோலை காணாமல் போனதற்க்கு காவல் நிலையத்தில் நான் புகார் அளித்தேனா என்றால் நான் புகார் அளித்தேன் ஆனால் காவல் நிலையத்தில் அதை எடுத்து கொள்ளவில்லை. காசோலை காணனாமல் போனதற்கு எனது வங்கியில் Stop Payment கடிதம் கொடுத்தேனா என்றால் நான் கொடுக்கவில்லை. செல்வராஜ் என்பவரிடம் நான் செய்து வரவு செலவுக்காக என்மீது காசோலை வழக்கு தாக்கல் செய்து ஈரோடு காசேலை விரைவு நீதிமன்றம் –1 குற்றவாளி என்று தீர்ப்பு ஏற்பட்டது என்றால் சரிதான். வாதி 02.07.2023 ரூ.4,10,000/– கடன் வாங்கி கொண்டு வழக்கு காசோலை கொடுத்துள்ளேன் என்றும் வாதியிடம் வாங்கிய தொகைக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
6. என்னுடைய சாட்சியம் நிலைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.
மறுவிசாரணை:–இல்லை